# 3

## *திறவுகோல் வசனம்: மத்தேயு 28:18*

# கர்த்தருடைய இராப்போஜனத்திற்கான அதிகாரத்துவம்

*வாரத்தின் முதல்நாள் தோறும் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிப்பதற்குக் கிறிஸ்தவர் கொண்டுள்ள அதிகாரத்துவம் என்ன? இந்த இராப்போஜனம் மனிதர்களின்பாரம்பரியமாக உள்ளதா அல்லது தேவனுடைய கட்டளையாக உள்ளதா?*

## ஆளுகை செய்கிற இயேசு நமது அரசர்

கிறிஸ்தவ யுகத்தில் இயேசு, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் கொண்டுள்ளார் (மத்தேயு 28:18). அவர் தேவனுடைய அரியணையின் வலது புறத்திற்கு ஏறிச்சென்றபோது, எல்லாம் அவருக்குக் கீழாக வைக்கப்பட்டது. நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

> எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபேசியர் 1:20-23).

அவர் பரத்துக்கேறுதல் மற்றும் மக்களினங்கள் மீது ஆளுகை செய்யும்படி உயர்த்தப்படுதல் ஆகியவற்றைக் குறித்து ஐநூறு ஆண்டுகளுக்கும் சற்று அதிக காலம் முன்னதாகவே தீர்க்கதரிசனம் உரைத்திருந்த தானியேலின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் (தானியேல் 7:13, 14).

இயேசு பரத்துக்கு ஏறினபோது அவர், தாவீதின் அரியணையில் அமர்ந்து ஆளத் தொடங்கினார், அது இப்போது அவரது அரியணையாக உள்ளது. அவரது அலுவல் தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் அரசர் ஆகியோரின் அலுவலாக உள்ளது.[1] இயேசு தமது அரியணையில் ஒரு ஆசாரியராக இருப்பார், அதாவது அவர் ஒரே வேளையில் ஆசாரியராகவும் அரசராகவும் இருப்பார் என்று சகரியா தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார் (சகரியா 6:13). அவர் பூமியில் ஒரு ஆசாரியராக ஊழியம் செய்ய இயலாதிருந்தது (எபிரெயர் 8:4); அரசர் மற்றும் ஆசாரியர் என்ற வகையிலான அவரது ஆளுகையானது பூமிக்குரியதாக இராமல் வானத்திற்கு உரியதாக உள்ளது. இப்போது அவர் தேவனுடைய வலதுபுறத்தில் இருந்து ஆளுகை செய்கிறார்.[2] சகலமும் அவருடைய பாதங்களுக்குக்

கீழாக்கப்பட்டதால் அவர் ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரம் செய்பவர்கள் யாவருக்கும் மேலானவராக இருக்கிறார் (1 கொரிந்தியர் 15:27).

## கிறிஸ்தவத்தைத் துவக்கினவரும் தோற்றுவித்தவருமான இயேசு

இரட்சிப்பு என்பது முதலாவதாக இயேசுவினால் பேசப்பட்டது (எபிரெயர் 2:3). அவர் கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் நடைமுறைகள் யாவற்றிற்றையும் தொடங்கினவராக இருக்கிறார் (எபிரெயர் 2:10ஆ; 12:2). அவர் ஒரு நடைமுறையைப் போதித்துள்ளார் என்றால், அது கடைப்பிடிக்கப்பட வேண்டும்; ஆனால் அவர் போதிக்காதவை நடைமுறைப்படுத்தப்படக் கூடாது. அவர் பிதாவினிடத்தில் இருந்து பெற்ற கட்டளைகளை (யோவான் 12:49, 50) வாயின் வார்த்தைகளினாலும் (யோவான் 17:8, 14), அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்றபின்பு பரிசுத்த ஆவியானவராலும் (யோவான் 14:26, 16:7-14) அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தார்.

புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரின் எழுத்துக்களில் காணப்படுகிற வகையில், இயேசுவின் கட்டளைகள் தேவனுடைய வார்த்தையாக உள்ளன. இந்தக் கடைசி நாட்களில் தேவன், இயேசுவின் மூலமாக நம்மிடத்தில் பேசியுள்ளபடியால் (எபிரெயர் 1:1, 2), நாம் அவர் கூறுவதைக் கவனித்துக் கேட்க வேண்டும். அவர் கூறுவதைக் கவனியாதவர்கள் மக்கள் மத்தியிலிருந்து அழிக்கப்படுவார்கள்.

இயேசுவே தமது சபையைத் தோற்றுவித்தவராகவும் சபை கட்டப்பட்டுள்ள ஒரே அஸ்திபாரமாகவும் இருக்கிறார். அது தனது ஒரே "தலையானவர்" (கொலோசெயர் 1:18) மற்றும் "நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர்" (யாக்கோபு 4:12) என்ற வகையில் அவருக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தியாக வேண்டும் (எபேசியர் 5:24). எல்லா மக்களும் அவரைக் கொண்டே நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோவான் 5:22; 2 கொரிந்தியர் 5:10; நடபடிகள் 17:31).

## நமது செயல் அறிவுறுத்துதல்களின் ஆதாரமூலமான இயேசு

இயேசுவுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் அவரது அதிகாரத்துவத்திற்கு ஒப்புக்கொடுத்தல் ஆகியவற்றிற்குக் குறிப்பிட்ட சில கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவைகள் மதிக்கப்படாதபோது, இயேசு தாம் யாராக மற்றும் என்னவாக இருக்கிறாரோ அதற்காக அவர் மதிக்கப்படாதவராக இருக்கிறார்.

(1) அவரைப்பின்பற்றுபவர்கள் அவர் கட்டளைகள் யாவற்றையும் கடைப்பிடிக்க வேண்டியவர்களாகவும் எழுதப்பட்டதற்கு மிஞ்சிப்போகாதவர்களாவும் இருக்க வேண்டும் (மத்தேயு 28:20; 1 கொரிந்தியர் 4:6; 2 யோவான் 9; காண்க யாக்கோபு 1:22).

(2) ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவர் பரிசுத்த ஆவியானவர் மூலமாக வெளிப்படுத்தி இருக்கிறார் (யோவான் 16:13; 2 பேதுரு 1:3).

*(3) அவரது ஞானம் மற்றும் திறன் ஆகியவற்றின் காரணமாக அவர், தமது சத்தியத்தைப் புரிந்துகொள்ளப்படக் கூடிய வார்த்தைகளினால் பரிசுத்த ஆவியானவர் மூலமாக எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 2:12, 13; 2 கொரிந்தியர் 1:13; எபேசியர் 3:3-5).*

*(4) அவர் வெளிப்படுத்த விரும்பியதை மிகச்சரியாக வெளிப்படுத்தியுள்ளார் என்ற உண்மையின் அடிப்படையில், அது தவறாகக் கையாளப்படவோ அல்லது பிறழ்வுபடுத்தப்படவோ கூடாததாக உள்ளது (2 கொரிந்தியர் 4:2; 2 பேதுரு 3:16, 17).*

*(5) வேறுவிதமாகப் போதிக்கிறவர்கள் ஆக்கினைக்கு உள்ளாகத் தீர்க்கப்படுகின்றனர் (கலாத்தியர் 1:8, 9) மற்றும் அவர்கள் அழிக்கப்படுவார்கள் (நடபடிகள் 3:22, 23). அவருடைய போதனையுடன் எவரும் ஒன்றைக் கூட்டவோ அல்லது அதிலிருந்து எதையும் குறைக்கவோ கூடாது.*

*(6) அவருடைய போதனை மனிதருடைய வார்த்தையல்ல ஆனால் தேவனுடைய வார்த்தை என்ற வகையில் கண்ணோக்கப்பட வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 2:13).*

*(7) வெளிப்படுத்தப்பட்ட வேதவசனம் எல்லா போதனைக்கும் அடிப்படையாக உள்ளது, ஏனெனில் இது தேவனுடைய மக்களுக்குத் தேவையான யாவற்றையும் வழங்குகிறது (யோவான் 16:13; 2 தீமோத்தேயு 3:16, 17).*

*(8) அவர் சகல சத்தியத்தையும் தெரிவித்துள்ளதால், இது பூரணமானதாகவும் முழுமையானதாகவும் உள்ளது (யாக்கோபு 1:25). தேவன் ஒருதரம் பேசியபின்பு, அவர் அத்துடன் எதையும் கூட்டுவதில்லை.*

*கர்த்தருடைய இராப்போஜனத்திற்கான அதிகாரத்துவம், அப்போஸ்தலர்களுக்கு இயேசுவின் அறிவுறுத்துதல் மீதும் (மத்தேயு 26:26-28; மாற்கு 14:22-24; லூக்கா 22:17-20) பவுலுக்கு அருளப்பட்ட வெளிப்படுத்துதல் மீதும் (1 கொரிந்தியர் 10:16-21; 11:23-34) அமைந்துள்ளது. இயேசு இராப்போஜனத்தை ஏற்படுத்தியபோது அவருடன் பவுல் இருந்திருக்கவில்லை என்பதால், அவர் தமக்கான அறிவுறுத்துதலைப் பிறரிடம் இருந்து பெற்றார் என்று கல்வியாளர்கள் சிலர் முடிவு செய்கின்றனர். இருப்பினும், ஏவுதல் பெற்ற மற்ற மனிதர்களுக்கு இயேசு செய்தது போன்றே, பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு பவுலுக்கு இயேசு வெளிப்படுத்தினார் என்பதே மிகவும் சாத்தியமான முடிவாக உள்ளது (எபேசியர் 3:3-5). லியோன் மோரிஸ் அவர்கள், “பவுலுக்கு நேரடியாக வெளிப்படுத்துதல்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதற்குப் பல குறிப்புகள் உள்ளன [நடபடிகள் 18:9, 10; 22:18; 23:11; 27:23-25; கலாத்தியர் 1:12; 2:2; 2 கொரிந்தியர் 12:7]. இதுவும் அதைப்போன்றே இன்னொரு விஷயம் என்பதாகக் காணப்படுகிறது” என்று மிகச்சரியாகக் கவனித்துள்ளார்.[3]*

## தொகுப்புரை

*கிறிஸ்தவ யுகத்தில் இயேசு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொண்டுள்ளார் (மத்தேயு 28:18). அவரது வார்த்தையே எல்லா விஷயங்களிலும் முடிவானதாக உள்ளது. அவரைக் கவனித்துக் கேட்டு அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் சோதனை வேளையில் உறுதியாக நிற்கும் வகையில் கன்மலை மீது கட்டப்பட்ட வீட்டைப் போன்று உள்ளனர். அவருக்குக் கீழ்ப்படியாதவர்கள், புயல் வருகிறபோது இடிந்து விழுகிற வகையில் மணல்மீது*

*கட்டப்பட்ட வீட்டைப் போன்று உள்ளனர் (மத்தேயு 7:24-27).*

---

குறிப்புகள்

*[1]தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் அரசர் என்ற வகையில் இயேசுவின் பணிப்பொறுப்புகள் பற்றி, நடபடிகள் 3:22, 23; எபிரெயர் 3:1; 4:14; 6:20; 8:1; ஏசாயா 9:6, 7; லூக்கா 1:32, 33; யோவான் 18:37; 1 தீமோத்தேயு 6:13-16; வெளிப்படுத்தின விசேஷம் 3:21; 17:14; 19:16 ஆகிய வசனப்பகுதிகளில் காணவும். [2]நடபடிகள் 2:33; 5:31; ரோமர் 8:34; கொலோசெயர் 3:1; எபிரெயர் 1:3; 8:1; 12:2; 1 பேதுரு 3:22 ஆகிய வசனப்பகுதிகளை காணவும்.* [3]Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1958), 159.